★ 750 தொன் அத்தியாவசியப் பொருட்களுடன் புதனன்று

# வடபகுதிக்கு கப்பல் மூலம் உணவுப்பொருள்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 160 திங்கள் 23-07-1990 (ஆடி 7) துல்ஹஜ் 29

வடபகுதிக்கான உணவுப் பொருட்கள் எதிர்வரும் புதன் கிழமை எம். வி. சிகிரியா கப்பல் மூலம் கொண்டு வரப்படவுள்ளன. இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தடையவுள்ளது. இக்கப்பலில் 750 தொன் உணவுப்பொருட்கள் கொண்டுவரப்படவுள்ளன, இவற்றில் 250 தொன் உணவுப்பொருட்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் மிகுதி யாழ் மாவட்டத்திற்கும் விநியோகிக்கப்படவுள்ளன. முல்லைத்தீவு துறைமுகத்தில் உணவுப்பொருட்களை இறக்கிய பின்னரே பருத்தித்துறைக்கு இக்கப்டால் வரவுள்ளது. பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குவதற்கு காங்கேசன் துறை துறைமுகத்தில் கடமை புரிந்த ஊழியர்கள் அழைக்கப்படவுள்ளார்கள். இக்கப்பலில் சிறிதளவு எரிபொருட்களும் வெளிநாட்டுக் கடிதப் பொதிகளும் கொண்டுவரப்படவுள்ளன. ...04 ஆம் பக்கம் பார்க்க

### வடபகுதியின் புதிய ராணுவ நடவடிக்கை ஆரம்பம்

# கிளிநொச்சி ராணுவ முகாமிற்கு

# ஆனையிறவு ராணுவம் செல்ல முயற்சி

## பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் விடுதலைப் புலிகள் வழிமடக்கி உக்கிரத்தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு செல்வதற்கு இராணுவத்தினர் புதிய முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். நேற்று இவ்வாறு முன்னேறிய இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். வட பகுதிக்கான புதிய இராணுவ நடவடிக்கையாகவே இது கருதப்படுகிறது.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று லக்ஸபானா வீதியூடாக கிளிநொச்சி நோக்கி வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடுந்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். லக்ஸபானா வீதியூடாக வெளியேறிய இவ் இராணுவத்தினரை விடுதலைப்

04ஆம் பக்கம் பார்க்க

## தள்ளாடியில் கடும் மோதல் 8 ராணுவம் பலி; 20 பேர் காயம்

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 8 இராணுவத்தினர் பலியாகியதாகவும் 20 இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

10-ம் கட்டையில் இடம்

— 04ஆம் பக்கம் பார்க்க

### கருணாநிதி இந்திய பிரதமரிடம் கோரிக்கை

## ஐ. நா. உதவியுடன் அகதிமுகாம் தமிழக அகதிச்சுமையை குறைக்கும்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உதவியுடன் இலங்கையின் வடக்குக்கிழக்கில் விரைவில் அகதிகள் முகாம்களை அமைக்க ஆவன செய்யும்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதி இந்திய பிரதமர் சிங்கை கேட்டுள்ளார்.

தினமும் தமிழ்நாட்டுக்கு வரும் இலங்கை அகதிகளின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சிப் பகுதியில் நேற்றும் பொம்மர் குண்டுவீச்சு

கிளிநொச்சி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்றுக்காலை பொம்மர், ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு மணித்தியாலம் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாக விடு

—04ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ஆஸ்பத்திரி உபகரணங்கள் பெருமளவில் களவாடப்படுகின்றன

யாழ் போதனா வைத்தியசாலையில் தற்போது சேமிப்பில் உள்ள மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் போன்றவை களவாடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம் மோசடி நடவடிக்கைகளில் கூடுதலாக வைத்தியசாலை ஊழியர்களே ஈடுபட்டு வருவதாகவும் ஊழியர்கள் மருந்துப்பொருட்கள் எடுப்பதற்கும் சில இயந்திரங்களின் பாவனைக்காகவும் போதனா வைத்திய சாலைக்கு செல்லும் போதே இம் மோசடி நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது அத்துடன் பாதுகாப்பு இன்

—04ஆம் பக்கம் பார்க்க

### புலிகளுக்கு ஆதரவு தருவதால்

## கருணாநிதி பதவி விலகவேண்டும் ஜெயலலிதா கண்டனம்

தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை இந்திய ஜனாதிபதி எடுத்துக் கொள்ள வேண்டும் தி. மு. க அரசு விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவே ஆதரவு வழங்குகிறது இது கண்டிக்கப்பட வேண்டும் என கூறியுள்ளார் அ. தி. மு. க தலைவி ஜெயலலிதா.

இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியின் போது அவர் இக் கருத்தை வெளியிட்டுள்ளார் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் சுதந்திரமாக இயங்க தமிழக முதலமைச்சர் மு.கரு

04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனையோருடன் அரசு பேசட்டும்

விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் குழுக்களுடனும், கட்சிகளுடனும் அரசு பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கேட்

—04ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா சென்ற தூதுக்குழு முடிவுகள் ஜனாதிபதிக்கு விளக்கம்

இலங்கையின் தற்போதைய நிலைமைகளை இந்திய அரசியல் தலைவர்களுக்கு விளக்கும் முகமாக புதுடில்லி சென்ற பாராளுமன்ற தூதுக்குழு நாடு திரும்பியுள்ளது.

இந்தியாவில் தாம் நடாத்திய பேச்சு விபரங்களை அவர்கள் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தூதுக்குழுவினர் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் எதிர்க்கட்சித்தலைவர் ராஜீவ் காந்தி போன்ற இந்திய அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்தமை தெரிந்ததே. (து)

### யாழ். போதனா வைத்தியசாலை இயங்க


## கொப்பேகடுவ அனுமதி மறுப்பு

யாழ். போதனா வைத்தியசாலையை மீள ஆரம்பிப்பது குறித்து வடபகுதி இராணுவ உயர் அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கிணங்க பாதுகாப்பு அமைச்சு வடபகுதி இராணுவ உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்ட போதே மேற்படி மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதிக்கான இராணுவப் பொறுப்பாளர் டென்சில் கொப்பேகடுவவின் இராணுவத்திட்டத்திற்கமையவே மேற்படி மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக அவ்வதிகாரிகள் சுட்டிக்காட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது. (03)

# ஸ்ரீலங்காவின் பவளில் புலிகள் வீதி ரோந்து



கொண்டச்சி 'கஜு' பாமில்' கடந்த மாதம் 21-ம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடந்த கடும் மோதலின் போது விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்ட 'பவள்' இராணுவ கவச வாகனம் நேற்று முன்தினம் கோண்டாவிலில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

கண்ணி வெடிகளினால் இலகுவில் தகர்க்க முடியாதது எனக்கருதப்படும் இந்த தென்னாபிரிக்க 'பவள்' கவச வாகனத்தையே ஸ்ரீலங்கா படையினர் தமது வீதி ரோந்துகளுக்கு அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த பவள் கவசம் புலிகளினால் யாழ். குடாநாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள செய்தியை இம்மாதம் 8-ம் திகதி முரசொலிப் பத்திரிகை 'புலிகளின் வாகன அணியில் தென்னாபிரிக்கப் பவல் கவசம்' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இங்கே படத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் பவள் கவசத்தில் விடுதலைப்புலி போராளிகள் வீதிரோந்து செய்வதைக் காணலாம் (கி)

# தமிழக முகாமில் தஞ்சமடைவோர் தமிழ்க் குழுக்களால் துன்புறுத்தல்

இலங்கையில் இருந்து தமிழ் நாட்டிற்குள் தஞ்சம்புகும் அகதிகள் மீது அங்கு ஏற்கனவே சென்றுள்ள சில தமிழ் அமைப்புக்கள் தாக்குதல் நடாத்தி துன்புறுத்துவதாக அறியப்படுகின்றது.

தமிழீழத்தில் இருந்து ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் கொடுமை தாங்க முடியாமல் தமிழகத்தில் தஞ்சம் புகும் அகதிகள் சிலரை மேற்படி கும்பல் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்துகின்றதாம்.

மண்டபம் முகாமிற்குள் இருக்கும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருத்தப்படுபவர்களை இங்குள்ள தமிழ் அமைப்புக்கள் தமிழக பொலிசாருக்கு ல[illegible]சம் கொடுத்து முகாமுக்[illegible] வெளியில் கொண்டு சென்[illegible] விசாரிக்கின்றனவாம்.

விசாரணையின்போ[illegible] இவர்கள் பலவகையிலும் து[illegible]புறுத்தப்படுவதாகவும், தூசி[illegible]கப்படுவதாகவும் தமிழகத்[illegible]லிருந்து நாடு திரும்பிய ஒ[illegible]வர் தெரிவித்தார். (35 கி)

### இராணுவ பொறுப்பாளர் கொப்பேகடுவ சொல்கிறார்:

# 'வடக்கு யுத்தத்தில் அடுத்த 10 தினங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும்'

'வடக்கு யுத்தத்தைப் பொறுத்த வரையில் அடுத்து வரும் பத்துத் தினங்கள் மிக முக்கியமான நாட்களாக அமைந்திருக்கும்'

இவ்வாறு வடபகுதிக்கான இராணுவப் பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். வவுனியா இராணுவ முகாமில் வைத்துக் கொழும்பு பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே கொப்பேகடுவ இப்படி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

'தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேடுவது அரசியல் வாதிகளின் வேலை, யுத்தரீதியில் வெற்றி பெறுவதே எமது வேலை. தாய்நாட்டுக்காக இந்தப் பொறுப்பை ஏற்பதில் நான் உறுதியாக உள்ளேன்''

'இராணுவ யுத்தத் தகவல்களை வெளியிடக்கூடாது. ஆனால் வடபகுதி யுத்தத்தைப் பொறுத்த வரையில் அடுத்த பத்துத் தினங்கள் தீர்க்கமான முக்கியத்துவம் நிகழ்ந்த நாட்களாகத் திகழப் போகின்றன என்று கூறலாம்' என கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். (கி)

## வல்வையில் வீடுகள் சேதம்

(உடுப்பிட்டி)

பலாலி இராணுவ முகாம் அடித்த ஆட்லறி ஷெல்லினால் வல்வையின் பல பாகங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம்இரவு 9.45 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

வல்வைச் சிவபுர வீதியைச் சேர்ந்த எஸ். சிவராசா, எஸ். சிவலிங்கம், தீருவில் சி. சிவகணேஸ், என். அருமைச்சந்திரன், நெடியகாடு ரி. பிரதீபராஜ் ஆகியோரது வீடுகள் பெரும் சேதத்துக்குள்ளாகின. (39.கி)

## மருந்து கையிருப்பு குறைகிறது விலைஅதிகரிப்பு; நோயாளர்அவதி

யாழ். குடாநாட்டில் கையிருப்பில் இருந்த மருந்து வகைகள் குறைந்துகொண்டே வருகின்றன. யாழ்-கொழும்பு போக்குவரத்து வசதி இன்மையால் மருந்து வகைகள் இப்போது இங்கே வருவது தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கையிருப்பில் இருக்கும் மருந்து வகைகளை விலை கூட்டி விற்பதோடு, பதுக்கப்பட்டும் வருகின்றது.

டெக்ரேஸ் நோமல் சோலைன் போன்ற மருந்து வகைகள் முடிவடையக் கூடிய சூழ்நிலையில் உள்ளது. இதனால் கூடிய உயிர் சேதங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பு தோன்றக்கூடும் என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றும் மின்சாரம் இன்மையால் குளிரூட்டியில் வைத்து பாவிக்கப்படும் சகல மருந்துகளும் பழுதடையக் கூடிய நிலைக்கு ஏற்பட்டுள்ளது. இதில் முக்கியமாக ஏற்பு ஊசி மருந்தும் அடங்கும்.

அத்துடன் ஏற்கனவே சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வந்தது. அம் மருந்துகள் இப்போதும் தட்டுப்பாடாக உள்ளது. அம்பிசிலின், பஞ்க, போன்ற அதிகளவு பாவிக்கப்பட்டு வரும் மருந்துக்கும் இப்போது தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (68 கி)

## ஷெல் வீச்சுக்கு குடும்பஸ்தர் பலி

பலாலி வடக்கைச் சேர்ந்த மத்தியாஸ் இராசம்பிள்ளை (45) என்பவர் ஷெல் வீச்சுக்குப் பலியானார்.

ஆறு பிள்ளைகளின் தந்தையான இவர் பொலிகண்டியில் இருந்து வீடு பார்க்கச் சென்ற போது இச்சம்பவம் நடைபெற்றது. (17-கி)

### கிளிநொச்சியில்

# பீப்பாக்குண்டுத்தாக்குதலில் அரச நெற்பண்ணை நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வெள்ளிக்கிழமை பீப்பாக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதினால் செயலக ஊழியர்கள் விடுதி சேதமடைந்துள்ளது. வயல்களும் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவமுகாமுக்கு பொதிபோடும் முயற்சியில் ஆகாயப்படையினர் ஈடுபட்ட போதே பீப்பாக்குண்டுகளும் வீசப்பட்டன.

தாக்குதலின்போது கிளிநொச்சி புத்தகோவில் முன்பு உள்ள பிரபல வர்த்தக நிலையங்களும் சேதமடைந்தன.

அதேவேளை கரடிப்போக்கு அரச நெற் பண்ணை வயல்களும் சேதமாகி எரிந்து அழிந்துள்ளன. (35 கி)

## துலாக்கள் மீண்டும் அச்சுலக்கையில்ஏறுகின்றன

(உடுப்பிட்டி)

''துலா''க்கள் மீண்டும் அச்சுலக்கையில் ஏறுகின்றன.

தற்போது மின் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக கிணற்றிலிருந்து தண்ணீர் பெற விவசாயிகள் முதல் பொது மக்கள் வரை ''துலா''வை மீண்டும் நாட ஆரம்பித்துள்ளனர்.

இக்காட்சியை வடமராட்சி, நீர்வேலி, புத்தூர்ப் பகுதிகளில் தினமும் காணலாம். (39 கி)

## படையினரின் தேவைக்கு மேலும் 500கோடி ரூபா

வடக்கு, கிழக்கில் யுத்தம் மூண்டுள்ளதினால் படையினருக்காக மேலும் 500 கோடி ரூபாவை அவசரமாக ஒதுக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இவ்வளவுபெரும் தொகைப் பணத்தை இராணுவத்திற்கு ஒதுக்குவதால் அது முழு நாட்டையுமே பாதிக்கின்றது.

இப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியிருந்தால் பெரும் பயனைப் பெற்றிருக்க முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். (கி)

## மருந்து லொறி படைகள் வசம்

யாழ்ப்பாணத்திற்கு மருந்து வகைகளை ஏற்றி வந்த இரு லொறிகள் றாகமையில் வைத்து படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மருந்துவகைகள் விடுதலைப்புலிகளுக்கு ஏற்றிச் செல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (கி)

## சாம், சங்கரி இடத்திற்கு புதியவர்களை நியமிக்க ஆலோசனை

சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாம்தம்பிமுத்து, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோக சங்கரி ஆகியோரின் இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த வெற்றிடங்களுக்கு எவரை நியமிப்பது என்பது குறித்து சம்பந்தப்பட்ட தமிழ் அமைப்புக்கள் கொழும்பில் கூடி ஆலோசனை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## பருத்தித்துறையில் பட்டப்பகலில் கொள்ளை

(பருத்தித்துறை)

பட்டப்பகலில் பூட்டப்பட்டிருந்த வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், ரொக்கப்பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் எஸ். காந்திதாஸன் வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றது. சம்பவதினம் காலை ஆலயத்திற்குச் சென்றிருந்த திரு. காந்திதாசன் நண்பகல் வீட்டிற்கு வந்து பார்த்த போதே வீடு உடைக்கப்பட்டு கொள்ளை இடம் பெற்றிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 கி)

## வெங்காயம் கிலோ 10 ரூபா

யாழ்பாணத்திலிருந்து, கொழும்பிற்கு லொறி போக்குவரத்து வசதியின்மையால் வெங்காய ஏற்றுமதி பாதிப்படைந்துள்ளது. இதனால் வெங்காயத்தின் விலை பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பெரிய வெங்காயம் இப்போது கிலோ 10/- ரூபாவாக விற்கப்படுகின்றது. சின்னவெங்காயம் இதன்விலையை விட குறைவாக உள்ளது. (68 கி)

## 50 மூடை அரிசி வழங்கப்பட்டது

(காவலூர்)

முதல் தொகுதியாக கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட அரிசி மூடைகளில் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐம்பது மூடை அரிசி வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு பலர் இடம் பெயர்ந்து வந்துள்ளதாலேயே இச்சங்கத்திற்கு கூடுதலான அரிசி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (24கி)

## கொள்ளை

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் களஞ்சிய அறை காரியாலயம் இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு பல முக்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

## தமிழிளைஞர் கைது

மட்டக்களப்பில் உள்ள கல்லாறுப் பகுதியில் 200 தமிழ் இளைஞர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கல்லாறு இராணுவமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவிடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். (03 ஸ்ரீ)

## தினமும்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் தினமும் 5 அல்லது 6 தமிழர்களது சடலங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் எரியூட்டப்படுவதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். (3-ஸ்ரீ)

இன்றைய நிலையில்
உங்கள் தேவையை
பூர்த்தி செய்ய
பொபி சோடா
பொபி நெல்லிரசம்
பொபி
இன்டஸ்றீஸ்
கண்டி வீதி
கைதடி, நுணாவில்
03738

பாரதிய ஜனதாக்கட்சி கோரிக்கை:

# இந்திய அனைத்து கட்சிக்குழுவை வட-கிழக்கிற்கு அனுப்ப வேண்டும்

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியின் தற்போதைய உண்மை நிலையைக் கண்டறியப் பாரதத்தின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்கிய தூதுக் குழுவொன்றை அப்பகுதிக்கு அனுப்ப இலங்கை, இந்திய அரசுகள் அனுமதிக்க வேண்டுமென பாரதிய ஜனதாக்கட்சி கோரியுள்ளது.

நேற்று சென்னையில் நடைபெற்ற பாரதிய ஜனதாக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்க உடனடியாக யுத்தநிறுத்தம் அங்கு அமுலாகவேண்டும்.

அத்துடன் வடக்குக், கிழக்கிற்கு முறையான முறையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் விமானங்களிலிருந்து குண்டுகளை வீசுவது தவறானது.

இலங்கையில் தீவிரவாதத்தை அடக்குவது என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றார்கள். ஒரு அரசாங்கம் தனது மக்களின் மீது விமானக் குண்டுகளை வீசுவது கண்டிக்கப்பட வேண்டியதொன்று.

வடக்குக், கிழக்குப் பகுதியில் தற்பொழுது என்ன நடக்கிறது என்பதை அறிய இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று உடனடியாக அங்கு செல்ல அனுமதிக்கப்படவேண்டும் எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# கிழக்கில் 'பச்சைப் புலிகள்'

## கைதாவோர் காலையில் சடலமாக

கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் அரசின் 'பச்சைப்புலிகள்' (Green Tigers) இரகசிய படையும் செயற்பட்டு வருவது தற்பொழுது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த 'பச்சைப்புலிகள்' அகதி முகாம்களிலும், மற்றும் வீடுகளிலும் உள்ள தமிழ் இளைஞர்களை கைது செய்து கொண்டு செல்வதாகவும் பின்னர் அவர்களைப் பற்றிய எதுவித தகவல்களையும் பெறமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை திருமலை நிலாவெளி தேவாலயத்திலிருந்த 18 அகதி இளைஞர்களை இந்த பச்சைப்புலிகளே கைது செய்ததாக இராணுவ தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாம்.

மட்டக்களப்பில் வீதியோரங்களில் தினமும் காலையில் எரிந்த நிலையில் பல தமிழ் இளைஞர்களின் சடலங்கள் தற்பொழுது காணப்படுகின்றன.

அகதி முகாம்களிலும், தேடுதலின்போதும் கைது செய்யப்படும் இந்த இளைஞர்கள் பின்னர் பச்சைப்புலிகளினால் கொல்லப்பட்டு எரிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

தெற்கில் ஜே. வி. பி. சந்தேக நபர்களும், ஆதரவாளர்களும் பெருமளவில் கொலை செய்யப்பட்டு வீதிகளிலும், ஆறுகளிலும் போடப்பட்டமைக்கும், கைது செய்யப்பட்ட பலர் மர்மமான முறையில் காணாமல் போனதற்கும் இந்த பச்சைப்புலிகளே காரணமென முன்னர் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இராணுவத்திலுள்ள மிகத் தீவிரமானவர்களைத் தெரிந்தெடுத்து உருவாக்கப்பட்ட இந்த பச்சைப் புலிகளின் நடவடிக்கை, நடமாட்டங்கள் மிக இரகசியமாகவே வைக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

# கொழும்புத் தபால்கள் இன்றுமுதல் விநியோகம்

கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்ட தபால்கள் இன்று திங்கட்கிழமை முதல் முகவரியாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இன்று யாழ். பிரதம தபால் நிலையத்தில் தரம் பிரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் அவை சம்பந்தப்பட்ட உள்ளூர் தபால் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய முகவரியாளர்களுக்கு விநியோகிக்கப்படும்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து இங்கு எடுத்துவரப்பட்ட தபால் பொதிகளில் வெளிநாட்டுத் தபால்கள் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## சுவரொட்டி எச்சரிக்கை

(உடுப்பிட்டி)

''க. பொ. த. உயர் தரப் பரீட்சை. இங்கு எடுப்பவர்களும் பிற மாவட்டங்களில் எடுக்க எத்தனிப்பவர்களும் துரோகிகளாகக் கருதப்படுவர்'

இவ்வாறு தமிழ்ப் பேசும் மாணவர் ஒன்றியத்தினால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (39-கி)

## தமிழ்த் தாயின் தவிப்பிது.........

மகனே......... !
போராடப் போகின்றேன்
என நீ
கூறாமல் போனதல்ல
என் கவலை......
நீ புறப்பட முன்
உனக்கு நான்
இரத்தப்பொட்டு வைக்க
வில்லை
என்பது தான்
என் சோகம்.........
என்னை நீ
புரிந்து கொண்டது
இவ்வளவு தானா?
உன்னை வாழ்த்தி அனுப்பு
பவள்
என நினைக்காமல்
என்னை வழி மறிப்பவள்
என நினைத்து விட்டாயே
என்னை நீ
புரிந்து கொண்டது
இவ்வளவு தானா?
முன்பெல்லாம்
நீ
'பிளேன்' ஏறி விடுவாயோ
என்பது தான்
என் பயம் எல்லாம்
இப்பவெல்லாம்
எங்கே நீ
பின் வாங்கி வந்திடுவாயோ
என்பது தான்
என் பயம் எல்லாம்
இந்த சின்னவன்
ஏன் இன்னமும்
சிறுவனாக இருக்கின்றான்
அவன் வளர்ந்து எப்போது
புலிக்குப் போவது.... ?
இது தான் எனது
இன்றைய தவிப்பெல்லாம் ..

—தர்ஷினி

## மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி; மகாராணிக்கு சிங்களவர் கடிதம்

'இலங்கையை மீண்டும் பொறுப்பேற்று ஆட்சி நடாத்துங்கள்.'

இவ்வாறு எலிஸபெத் மகாராணிக்கு கடிதமெழுதியுள்ளார் ஹக்மனையைச் சேர்ந்த தயாரத்ன என்பவர்.

தற்பொழுது இனப் பிரச்சினையினாலும், அரசின் திட்டமிடப்படாத நடவடிக்கைகளினாலும், கிளர்ச்சிகளினாலும் இலங்கை அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.


எனவே பிரிட்டிஷ் அரசு. மீண்டும் இலங்கையைப் பொறுப்பேற்று ஆட்சி நடாத்த வேண்டும் எனவும் இவர் கோரியுள்ளார். (கி)

## அரிசி கிலோ 26 ரூபா

யாழ். நகரில் ஒரு கிலோ குத்தரிசி நேற்று 26 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் 15 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் விலை கடந்த ஒரு சில தினங்களில் திடீரென அதிகரித்து வருகின்றது.

# களம் பல கண்ட யாழ். கோட்டை (15)



மன்னார் அடம்பனில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பயங்கரமான நேரடி மோதல் ஒன்று நிகழ்ந்தது 15 ஒக்டோபர் 1986 இல். அதில் விடுதலைப் புலிகள் சார்பில் லெப்டினன்கேர்ணல் விக்ரரும் இரண்டாவது லெப்டினன் றோமும் களப்பலியாகினர். இராணுவத்தினரில் 24 பேர் பலியாகினர். அவர்களில் ஒன்பதுபேரின் சடலங்கள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அச்சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும்சிறைப்பிடிக்கப்பட்டனர். மரணமான இராணுவத்தினரில் ஒன்பதுபேரின் சடலங்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணக்கோட்டைஇராணுவ கப்டன் கொத்தலாவல தளபதி கிட்டுவிடம் கோரிக்கை விடுத்தார். விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்தனர். அன்று மாலை விலையுயர்ந்த சவப்பெட்டிகளில் அச்சடலங்கள் தனித்தனியாக இடப்பட்டு வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு யாழ். கோட்டை முன்றலிற்கு எடுத்துச்செல்லப்பட்டன. நிராயுதபாணிகளாகக் கோட்டையிலிருந்து வெளிவந்த கப்டன் கொத்தலாவல அச்சடலப் பேழைகளை நன்றியுடன் பெற்றுச்சென்றார்.

அடம்பனில் கைதான இரு ஸ்ரீலங்கா இராணுவ வீரர்களையும் விடுவிக்கும் முயற்சியில் விஜேகுமாரணதுங்க ஈடுபட்டார். தளபதி கிட்டுவுடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து அவரைச் சந்திக்க அனுமதி பெற்றார். 27 ஒக்டோபர் 1986 அன்று அவரும் ஒஸி அபே குணசேகராவும் விமானம் மூலம் பலாலி வந்தனர். பின்னர் ஹெலிகொப்ரர் மூலம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கிருந்து கப்டன் கொத்தலாவல, கப்டன் பெரேரா ஆகியோரால் கோட்டை வாசலுக்கு அழைத்து வரப்பட்டு தளபதி கிட்டுவிடம்கையளிக்கப்பட்டனர். விஜே குழுவினர் விடுதலைப்

### ★ செங்கை ஆழியான்

புலிகளால் அவர்களது முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு கைதிகளுடன் அளவளாவ விடப்பட்டனர். அவர்களை விடுவிப்பதாயின் நாங்கள் கோரும் இரு விடுதலைப் புலிகளை இலங்கை அரசு விடுதலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையைத் தளபதி கிட்டு விதித்தார். அந்த நிபந்தனையை ஏற்று விஜே குழுவினர் மீண்டும் சென்றனர்.

கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசசார்பில் கப்டன் கொத்தலாவலையும் கேணல் ஆனந்த வீரசேகரவும் முன்னேற்பாட்டின்படி யாழ்ப்பாணக்கோட்டையைவிட்டு வெளியில் வந்தனர். அவர்களையும் அவர்களுடன் நிராயுதபாணிகளாக வெளியில் வந்த 12 இராணுவத்தினரையும் யாழ்ப்பாணக் கோட்டை வாசலில் வரவேற்ற தளபதி கிட்டு, ரஹீம், திலீபன், ஆகியோர் தம் வாகனங்களில் ஏற்றி தம் முகாமிற்கு அழைத்துச் சென்றனர். கப்டன் கொத்தலாவல 19 பேரின் பெயர்களைத் தளபதி கிட்டுவிடம் கொடுத்தார். கைதாகியுள்ள விடுதலைப் புலிகளின் அப்பெயர்ப் பட்டியலிலிருந்து ஐவரை தளபதி கிட்டு தேர்ந்தெடுத்தார். இப்பேச்சுவார்த்தைகளில் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை, தென்மராட்சிப் பொறுப்பாளர் கேடில்ஸ், வலிகாமம் பொறுப்பாளர் ஜொனி ஆகியோரும் கலந்துகொண்டனர். விடுதலைப்புலிகளின் முகாமில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த ஆயுதங்களை வாங்கிப்பார்த்த கப்டன்கொத்தலாவலவியப்புத் தெரிவித்தார்

04, டிசம்பர், 1986 இல் கொழும்பிலிருந்து விஜே குமாரணதுங்கவுடன் 35 பௌத்தகுருமார் உட்பட 65 பேர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பஸ்சில் புறப்பட்டு வந்தனர். அரசாங்கம் முதலில் இவர்களது பயணத்தைத் தடுத்தபோதிலும் பின்னர் அனுமதித்தது ஆனையிறவுக்கு இப்பால் இவர்களை விடுதலைப்புலிகள் தம்முடன் அழைத்து வந்தனர். கைதிகளுடன் அவர்கள் அளவலாவினர். ''எமது நிபந்தனையிலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். எவ்வளவு காலம் சென்றாலும் சிப்பாய்களைக் கொல்ல மாட்டோம்'' என அவர்களிடம் கிட்டு தெரிவித்தார். அவர்கள் திரும்பிச் சென்றனர். 27, டிசம்பர் அன்று காங்கேசன்துறையில் கைதிகள் பரிமாற்றம் பற்றி அரசுக்கும் புலிகளுக்கும் ஒருபேச்சுவார்த்தை நடந்தது. காங்கேசன்துறைப்பட்டின சபை மண்டபத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் வின்சன்ட் பெரேரா, கப்டன் கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டனர். தளபதி கிட்டு அரசியற் பொறுப்பாளர் திலீபன், றஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிபந்தனைகளின்படி கைதிகள் பரிமாற்றம் பின்னர் நிகழ்ந்தது.

(தொடரும்)

தற்போதைய அரசின் போக்குக் குறித்து ஈரோஸ்

# நாம் ஸ்ரீலங்காவின் குடிமக்களல்ல

# இரண்டு பகை நாடுகளே மோதுகின்றன

விமானத் தாக்குதல்கள், நீண்ட தூர ஏவுகணை தாக்குதல், பீரங்கி தாக்குதல் மறைமுகமாகவும் நேரடியாகவும் மேற்கொள்ளப்படும். பொருளாதாரத் தடைகள் என்பவை இரு பகைநாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதும் காட்சியையே எமக்கு நினைவூட்டுகிறது. மேற்படி இராணுவ நடவடிக்கைகள் நாம் ஸ்ரீலங்காவின் குடிமக்கள் அல்ல என்ற முடிவை மேற்கொள்ளவே எமது மக்களை நிர்ப்பந்திக்கிறது.

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) பொதுச்செயலாளர் வே. பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. அப்பாவி மக்களின் அடிப்படை நலன்களை நசுக்கும் மேற்படி நிலைகளை நீக்கும் பொருட்டு நாம் விடுத்த கோரிக்கைகள் வீணானதையடுத்து நாம் பதவிகளைத் துறந்து எம் மக்களின் துன்பத்திலும் வேதனையிலும் பங்கெடுத்துக்கொள்வதே சிறந்தது எனக்கருதுகின்றோம்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலையின் ஏழாவது நினைவு நாளான இன்று முதல் நாம் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலிருந்து முற்றாக விலகத் தீர்மானித்திருப்பது சாலப் பொருத்தமானதே. ஏழாண்டுகளுக்கு முன்பு எவ்வாறு இனவாதம் தலைவிரித்து ஆடி நாடு முழுவதும் தமிழ் பேசும் மக்களின் இருப்பும்-வாழ்வும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததோ, அதே போன்றதான ஒரு நிலைமையே இன்றும் நிலவுகின்றது. சிங்கள பௌத்த இனவாதத்தின் குறியீடாகவே அரசும், அதன் கருவிகளும் செயற்பட்டுஇனப்படுகொலையொன்றை கட்டவிழ்த்திருக்கும் நிலையில் ஜனநாயகத்தின் குரலாக நாம் விடுக்கும் நியாயங்கள் அர்த்தமற்றதாகி விடுகின்றன. இதனைக் கையாலாகாதவர்களாக கைகட்டிப் பார்த்திருக்கவியலாது என்பதால் எமது நாடாளுமன்றஆசனங்களைத் துறக்க முடிவுசெய்துள்ளோம்.

கடந்த ஆண்டில் நாம் இந்த நாடாளுமன்றத்தினுள் அடியெடுத்து வைத்தபோதும் எமக்கு முழுமையான நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை, என்பதை அன்றே தெளிவு படுத்தியிருந்தோம். ஆனால் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைஅரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு நிவர்த்திக்கவும், தமிழ்பேசும் மக்கள் மீது இராணுவ அடக்குமுறை ஏவி விடப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா அவர்களின் உறுதி மொழிகளின் அடிப்படையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்றோம். எனினும் கடந்த ஜூன் 11-ம் திகதி முதலான சம்பவங்களின் தொடர்ச்சியாக மீண்டும் இராணுவ அடக்குமுறை ஏவி விடப்பட்டிருப்பதை எவ்வகையிலும் பொறுத்துக் கொள்ள இயலாது.

இராணுவ ரீதியாக தமிழ் பேசும் மக்களின் எண்ணங்களைத் தோற்கடிக்க முயலும் அதே சமயம், 'தேசிய பாதுகாப்பு' என்னும் முலாம் பூசியபடி பௌத்த - சிங்கள இனவாதம் தூண்டப்பட்டு வளர்க்கப்படுகின்றது. ஐக்கிய இலங்கை- இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பவைகள் வெறுமனே நுனி நாக்குப் பேச்சுக்களாக வலுவிழந்து போகின்றன. நாளாந்தம் படைவீரர்களின் மனோபலத்தைப் பேணும் முயற்சியாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் முழுத் தமிழ் பேசும் மக்களையும் அச்சுறுத்துவதாக அமைகின்றது.

இந்த நிலையில் அரசியல் அமைப்பு ரீதியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஜனநாயக வழி முறைகளினூடாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் புரிந்து கொள்ளப்படும்-நியாயமான நிரந்தரத் தீர்வுகள் எட்டப்படும் என்ற கற்பனையில் காலம் கழிப்பது சற்றும் பொருத்தமுடையதாக எமக்குத் தோன்றவில்லை. கடந்த காலங்களில் ஸ்ரீலங்காவின் அரசுத் தலைவர்கள் வீழ்த்தப்பட்ட பேரினவாதச் சக்திக்குள்ளேயே ஜனாதிபதி பிரேமதாஸவும் அவரது அமைச்சரவையும் வீழ்த்தப்பட்டு விட்டது என்றே நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாயுள்ளோம்.

இந்திய அரசும் அதன் இராணுவமும் செய்ததைப் போல மாற்றுச் சக்திகளைப் பயன் படுத்தி மாகாண சபைகளை தமிழ் பேசும் மக்கள் மீது வலுக் கட்டாயமாக திணித்து விடும் முயற்சியே மாகாணசபைத் தேர்தலுக்கான அறிவிப்பு என நாம் நம்புகின்றோம். ஆனால் ஒரு புறத்தில் இன ஒழிப்பையும், இராணுவ முஸ்தீபுகளையும் நடத்திக் கொண்டே மறுபுறத்தில் ஐக்கிய இலங்கை என்பதைக் காப்பாற்ற முனைவது அர்த்தமற்றது மட்டுமல்ல, காரிய சாத்தியமற்றதும் ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளோம். (து)

## காயமடையும் போராளிகளை சிற்றூரவைகள் பராமரிக்கும்

காயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள போராளிகளை பராமரிக்கும் பொறுப்பை மானிப்பாய் பிரதேச சிற்றூரவைகள் ஏற்றுள்ளன.

அண்மையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இன்று திங்கட்கிழமை முதல் போராளிகளை பராமரிக்கும் பொறுப்பு சிற்றூரவை உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும்.

மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, சிற்றூரவை உறுப்பினர்கள் சுழற்சி முறையில் இப்பணியினை நிறைவேற்றுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

### கிளிநொச்சி...

புலிகள் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் வைத்தே தாக்குதலை மேற் கொண்டுள்ளனர். தொடர்ந்தும் இத் தாக்குதல் இடம்பெற்றுவருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாம் வாய்க்கால் ஊடாக கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு செல்வதற்காகவே இவ் இராணுவத்தினர் லக்ஸபானா வீதியூடாக வெளியேறியதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சிஇராணுவமுகாம் தற்போது விடுதலைப்புலிகள் சுற்றிவளைப்பில் உள்ளது. அதன்மீது விடுதலைப்புலிகள் எவ்வேளையிலும் தாக்குதல் நடாத்தலாம் என்ற அச்சத்தினாலே ஆனையிறவு இராணுவத்தினர் கிளிநொச்சி நோக்கி வெளியேற முயல்வதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (03-து)

### ஐ. நா உதவி...

தொகை தற்போது முப்பதாயிரத்தை எட்டி விட்டதாகவும் இன்னும் ஒரு மாதத்தில் இத்தொகை ஒரு லட்சத்தை தாண்டிவிடும் எனவும் முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (து)

### வடபகுதிக்கு..

இக்கப்பல் கொழும்புக்கு திரும்பிச் செல்லும் போது இங்கிருந்து கடிதப் பொதிகளைக் கொண்டு செல்லவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் வரும் என்ற செய்தி முதன்முதலில் முரசொலியில் வெளிவந்தது தெரிந்ததே. (3)

## தொடரும் தாக்குதல்

(உடுப்பிட்டி)

நேற்று முன்தினம் அதிகாலை முதல் நள்ளிரவு வரை வல்லை, துன்னாலைப் பகுதிகளில் பல தடவை ஹெலிகப்டர்கள் தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல் சம்பவங்களால் வல்லை ஊடாக எவ்வித வாகனப் போக்குவரத்துகளும் நடைபெறவில்லை, நெல்லியடி தனியார் மினி பஸ் சங்கம் தனது சேவையினைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தது. (39 கி)

### கருணாநிதி ..

ணாநிதி அனுமதி அளித்துள்ளார் அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கும்பணிப்புரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. இத்தகைய காரணங்களால் முதலமைச்சர் கருணாநிதிஉடனடியாக பதவி விலகி தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட வேண்டும் என ஜெயலலிதா மேலும் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். (து)

## சிறிய செய்திகள்

### இரவு குண்டுவீச்சு

நேற்றிரவு எட்டுமணியளவில் இரு அவ்ரோ விமானங்கள் யாழ். நகர், கோட்டைப் பகுதிகளில் குண்டுவீசின. சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து அறியப்படவில்லை.அநேகநாட்களின்பின் இரவு குண்டுவீச்சு நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (து)

### உரிமையாளருக்கு

யாழ். மாவட்ட தனியார் தூரசேவை பஸ் உரிமையாளர்களுக்கான சந்திப்பு இன்று மாலை 2-00 மணிக்கு யாழ் மாநகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. மேற்படி சந்திப்புக்கு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல தனியார் நீண்ட தூர பஸ் உரிமையாளர்கள் அனைவரும் சமுகம் தரும்படி யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொள்கின்றனர். (து)

### போர்க்கால கூட்டம்

இன்று மாலை நான்கு மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் போர்க்கால ஆலோசனைக் கருத்தரங்கை விடுதலைப் புலிகளின் வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (து)

### தேறுகிறார்

(கிளிநொச்சி)

கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பின் போது காயமடைந்த விடுதலைப்புலிகளின் வன்னிமாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன் வைத்திய சிகிச்சையின் பின் தேறிவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (35து)

### தள்ளாடியில்...

பெற்ற இத்தாக்குதலில் 6 இராணுவத்தினர் பலியாகி 9 பேர் காயமடைந்ததாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

இதே வேளை முருங்கன் பகுதியில் தங்கியுள்ள இராணுவத்தினர் 4 வீடுகளை எரியூட்டியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். 03

### யாழ்....

மையால்வெளிநபர்கள் ஊடுருவ ாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் மருந்துப் பொருட்களுடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத் தொகையை செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-து)

### இன்று விடுதலை

விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப் பட்டுள்ளோரில் ஒரு பகுதியினர் இன்று மாலை 4 மணியளவில் பண்டத்தரிப்பு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப்பிரதேசக் காரியாலயத்தில் வைத்து விடுவிக்கப்படுகின்றனர். இவர்களைப் பெற்றோர் வந்து பொறுப்பேற்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### கடந்தவாரம்

கடந்தவாரம் மட்டும் வடக்கு, கிழக்கில் 138 இராணுவச்சிப்பாய்கள் பலியானதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் 113 பேரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### சலுகை

இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் மரணமடைந்த காயமடைந்த இந்திய சிப்பாய்களின் குடும்ப அங்கத்தினருக்கு இந்திய அரசு சிலசலுகைகளை அளிக்க முன்வந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காவல் அரண் மீது தாக்குதல்

வவுனியா காமினி வித்தியாலய இராணுவ முகாமில் உள்ள காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.சேதவிபரங்கள் கிடைக்கவில்லையென விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கூறின

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தாக்குதலையடுத்து முகாமிலிருந்து ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன.

### இருவர் பலி

மட்டக்களப்பு தெற்குகரைச்சோலைஎன்னுமிடத்தில் நேற்று முன்தினம் ஹெலித் தாக்குதல் மேற் கொள்ளப் பட்டது.

இத்தாக்குதலில் இருபொது மக்கள் பலியாகியுள்ளதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 03

### விடுதலைப் புலிகள்...

டுள்ளார்.

இதே வேளை நேற்று மீண்டும் ஆறு தமிழ்க் குழுக்களும் சந்தித்து தற்போதைய சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது,

### கிளிநொச்சிப்பகுதி ..

தலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலையடுத்து கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ச்சியான பொம்மர் தாக்குதல் இடம்பெற்று வருவது தெரிந்ததே. (03-து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 23-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,